தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.71/மா/2024
நாள் 25.02.2025

| | | |
|---|---|---|
| திரு எஸ். சுரேஷ்<br>காஞ்சிபுரம் | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>காஞ்சிபுரம் மாநகராட்சி<br>காஞ்சிபுரம் | --- | எதிர் மனுதாரர் |

காஞ்சிபுரம், மடம் தெரு, எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு எஸ். சுரேஷ் என்பவரின் 12.03.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2024 அன்று பெறப்பட்டு, 71/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

காஞ்சிபுரம், மடம் தெரு, எண்.3 என்கிற முகவரியில் வசிக்கும் திரு எஸ். சுரேஷ் என்பவர் தனது 12.03.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

> “நான் மூத்த குடிமகன் ஆவேன். மேற்கண்ட முகவரியில் S.R கேஸ் ஏஜென்சிஸ் (Indian Oil Corporation)-ல் குடோன் இருந்த நிலையில் தற்போது கேஸ் புக்கிங் அலுவலகம் மட்டும் நடத்தி வருகிறேன். இதை சுற்றி டவுன் சர்வே எண் 290/1ல் உள்ள சுமார் 0.74 சென்ட் எனக்கு சொந்தமான இடத்தை சுற்றி சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு அமைத்த சிமெண்ட் காம்பவுண்டு சுவர் இருந்து வருகிறது. மேற்படி காம்பவுண்டு சுவரானது சிதலமைடந்ததால் அதனை முழுவதுமாக இடித்து அகற்றி விட்டு புதியதாக கட்டிடம் எழுப்புவதற்காக அனுமதி கோரி காஞ்சிபுரம் மாநகராட்சியில் விண்ணப்பித்தேன். இந்நிலையில் மேற்படி காம்பவுண்டை ஒட்டி செல்லும் கால்வாயின் மேல் சட்ட விரோதமாக உணவகம் நடத்தி வரும் தீனன் (எ) தீனதயாளன் என்பவர் முறையான எந்தவிதமான அனுமதியுமின்றி மேற்படி எனக்கு சொந்தமான காம்பவுண்டு சுவரில் பக்கவாட்டில் துளையிட்டு ஹுண்டாய் ஷீட் அமைத்துள்ளார். இதனால் மேற்படி காம்பவுண்டு சுவரை இடித்து அகற்றும் பணிக்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதுடன் மேற்படி நபர் மாநகராட்சிக்கு சொந்தமான கால்வாயை ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இந்த ஆக்கிரமிப்பினை அகற்றி மேற்படி சட்டவிரோத கட்டுமானத்தை அகற்றுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.”

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 05.08.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் தனது 19.09.2024 மற்றும் 21.01.2025 நாளிட்ட அறிக்கைகளில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 3, பிளாக் 3, நகரளவு எண்.291 சர்வே ஆவணங்களின்படி சர்க்கார் புறம்போக்கு கால்வாய் என்கிற வகைப்பாட்டில் திரு தீனன் (எ) தீனதயாளன் என்பவர் சுமார் 15 ச.மீ அளவுள்ள இரும்பு சீட் அமைத்து கட்டிடம் கட்டி துரித உணவகம் நடத்தி வருகிறார். மேற்படி நபர் ஆக்கிரமணம் செய்துள்ள கட்டிடத்தை அகற்ற கோரி அன்னாருக்கு தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம் 1998 (2022ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு சட்டம் 35 பிரிவு 128(1)(b) 2ன் கீழ் ஆக்கிரமிப்பு அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டு 19.09.2024 அன்று ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்று தெரிவித்துள்ளார்."

4.இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.01.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.01.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர், 24.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6 காஞ்சிபுரம் மாநகராட்சி, கண்காணிப்பாளர் 24.01.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3, பிளாக் 3, நகரளவு எண்.291, சர்வே ஆவணங்களின்படி சர்க்கார் புறம்போக்கு கால்வாய் என்கிற வகைப்பாட்டில் திரு. தீனன் (என்கிற) தீனதயாளன் என்பவர் சுமார் 15 சதுர மீட்டர் அளவுள்ள இரும்பு சீட் அமைத்து கட்டடம் கட்டி துரித உணவகம் நடத்தி வந்தார். மேற்படி நபர் ஆக்கிரமணம் செய்துள்ள கட்டிடத்தை அகற்ற கோரி அன்னாருக்கு தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம் 1998 (2020–ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு சட்டம்) 35 பிரிவு 128 (1) (b) 2–ன் கீழ் ஆக்கிரமிப்பினை அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும், கடந்த 19.09.2204 அன்று மனுதாரர் திரு. எஸ். சுரேஷ் தனது 12.03.2024 நாளிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்பதை உறுதி அளித்து உள்ளார் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்."

7. மனுதாரருக்கு தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்றத்தில் 17.02.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.02.2025 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

8. மனுதாரர் தன்னுடைய 14.02.2025 நாளிட்ட கடிதத்தில், "எனது மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன என்பதை தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன். எனவே நான் அளித்த முறையீட்டு மனுவினை தாங்கள் கோர்வை செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்றும், எனது வயோதிகத்தின் காரணமாக என்னால் தங்கள் நடுவத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணைக்கு நேரடியாக முன்னிலையாக முடியவில்லை. அதனை தாங்கள் மன்னித்து மேற்படி எனது மனுவை நான் கோரியபடி கோர்வை செய்ய வேண்டுகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

9. மனுதாரரின் முறையீட்டு மனு, மனுதாரரின் கடிதம், காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் கண்காணிப்பாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தனக்கு சொந்தமான இடத்தில் S.R. கேஸ் ஏஜென்சிஸ் Indian Oil Corporation-ல் குடோன் இருந்த நிலையில் தற்போது கேஸ் புக்கிங் அலுவலகம் மட்டும் நடத்தி வருகிறேன் என்றும் இதை சுற்றியுள்ள எனக்கு சொந்தமான இடத்தில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு அமைத்த சிமெண்ட் காம்பவுண்டு சுவர் சிதலம் அடைந்ததால் அதனை முழுவதுமாக இடித்து அகற்றி விட்டு புதியதாக கட்டிடம் எழுப்புவதற்காக அனுமதி கோரி காஞ்சிபுரம் மாநகராட்சியில் விண்ணப்பித்தாகவும், இந்நிலையில் மேற்படி காம்பவுண்டை ஒட்டி செல்லும் கால்வாயின் மேல் சட்ட விரோதமாக உணவகம் நடத்தி வரும் தீனன் (எ) தீனதயாளன் என்பவர் முறையான எந்தவிதமான அனுமதியின்றி மேற்படி எனக்கு சொந்தமான காம்பவுண்டு சுவரில் பக்கவாட்டில் துளையிட்டு ஹுண்டாய் ஷீட் அமைத்துள்ளதால். தன்னால் புதியதாக கட்டிடம் கட்ட இயலவில்லை என்றும், மேற்படி நபர் மாநகராட்சிக்கு சொந்தமான கால்வாயை சட்டவிரோத ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் அதனை அகற்றுமாறு கோரியுள்ளார்.

காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 3, பிளாக் எண் 3, நகரளவு எண் 291 சர்வே ஆவணங்களின்படி சர்க்கார் புறம்போக்கு கால்வாய் என்ற வகைப்பாட்டில் திரு தீனன்(எ) தீனதாயளன் என்பவர் சுமார் 15 ச.மீ. அளவிற்கு இரும்பு சீட் அமைத்து கட்டிடம் கட்டி துரித உணவகம் நடத்தி வந்ததாகவும், அந்த ஆக்கிரமிப்பினை அகற்ற கோரி அன்னாருக்கு தமிழ்நாடு உள்ளாட்சிகள் சட்டம் 1998 (2022ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு சட்டம்)ன் கீழ் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டு 19.09.2024 அன்று ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்பது காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள், மற்றும் கண்காணிப்பாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறியமுடிகிறது.

இந்நேர்வில் மனுதாரர் கோரியவாறு மனுதாருக்கு சொந்தமான காம்பவுண்டு சுவரை ஒட்டி செல்லும் கால்வாயினை ஆக்கிரமித்து அதன் மேல் நடத்தி வந்த துரித உணவகம் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலர்களால் 19.09.2024 அன்று அகற்றப்பட்டுவிட்டதாலும், மனுதாரரும் தன்னுடைய 14.02.2025 நாளிட்ட கடிதத்தில் தனது மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன என்று தெரிவித்த நிலையில், மனுதாரரின் 12.03.2024 நாளிட்ட முறையீட்டு மனு மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என இம்முறைமன்றம் கருதி அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு எஸ். சுரேஷ்
த/பெ எஸ். ஆர். சண்முகம்,
எண்.3, மடம் தெரு,
காஞ்சிபுரம் 631 501.

2) ஆணையர்,
காஞ்சிபுரம் மாநகராட்சி
காஞ்சிபுரம் 631 502

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).